II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**MCOP. No. 72/2023**

Deposition of witness for the Petitioner / PW 1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 29.07.2025

| | | | |
|---|---|---|---|
| Name : | Perumal | Caste : | |
| Father's / Husband's Name : | | Calling : | |
| Age : | | Religion : | |
| Village : | | Taluk : | |

முதல் விசாரணை=

நான் இந்த வழக்கின் மனுதாரர். ஏற்கனவே மா.சா.1 ஆக என்னுடைய முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கின்றேன். அதில் உள்ள விவரங்கள் உண்மையானவை என நேரில் அறிந்து கையெழுத்திட்டுள்ளேன். அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை இன்று ம.சா.ஆ.1 முதல் 21வரை குறியீடு செய்ய வேண்டுகின்றேன்.

1. முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1
2. பிரேத பரிசோதனை அறிக்கை ம.சா.ஆ.2
3. இறுதி அறிக்கை ம.சா.ஆ.3.
4. எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிய நபரின் ஓட்டுனர் உரிமம் ம.சா.ஆ.4
5. எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல் ம.சா.ஆ.5.
6. வரைபட நகல் ம.சா.ஆ்.6.
7. எனது தாயாரின் ஆதார் நகல் ம.சா.ஆ.7
8. எனது தாயாரின் இறப்பு சான்றிதழ் ம.சா.ஆ.8.
9. வாரிசு சான்றிதழ் ம.சா.ஆ.9
10. எனது ஆதார் நகல் ம.சா.ஆ.10.
11. எனது வங்கி கணக்கு புத்தகம் ம.சா.ஆ.11.
12. எனது பேன் கார்டு நகல் ம.சா.ஆ.12.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTR080003832023/truecopy/order-2.pdf

www.ecourtsindia.com

13. 2ம் மனுதாரரின் ஆதார் நகல் ம.சா.ஆ.13.

14. 2ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் ம.சா.ஆ.14.

15. 2ம் மனுதாரரின் பேன் கார்டு நகல் ம.சா.ஆ.15.

16. 3ம் மனுதாரரின் ஆதார் நகல் ம.சா.ஆ.16.

17. 3ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் ம.சா.ஆ.17.

18. 3ம் மனுதாரரின் பேன் கார்டு நகல் ம.சா.ஆ.18.

19. 4ம் மனுதாரரின் ஆதார் நகல் ம.சா.ஆ.19.

20. 4ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் ம.சா.ஆ.20.

21. 4ம் மனுதாரரின் பேன் கார்டு நகல் ம.சா.ஆ.21.

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-

இந்த மனுவை என் தாயார் விபத்தில் இறந்துவிட்டதால் இழப்பீடு கோரி தாக்கல் செய்துள்ளோம். எந்தெந்த காரணங்களுக்கா எவ்வளவு தொகை இழப்பீடாக கோரியுள்ளோம் என்பது தற்போது குறிப்பாக ஞாபகம் இல்லை. நான் தற்போது பட்டம்மாள் நகர், பூந்தமல்லியில் குடியிருந்து வருகிறேன். அதேபோல் எனது சகோதரி லட்சுமி சுமித்ரா நகர், பூந்தமல்லியில் குடியிருந்து வருகிறார். எனது சகோதரர் ரவி மற்றும் சகோதரி தரணி ஆகியோர் நெல்லூரில் குடியிருக்கிறார்கள். ரவியின் ஆதார் அட்டையில் தந்தை பெயர் தவறுதாலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் அனைவரும் திருமணம் ஆகி தனித்தனியே வசித்து வருகிறோம் என்றால் சரிதான். என் தாயார் ராஜா அக்ரகாரம் பூந்தமல்லியில் வசித்துவந்தார் என்றால் சரிதான். ஆனால் எங்களது மனுவில் நாங்கள் அனைவரும் ஒரே முகவரியில் வசித்து வருவதாக கூறியுள்ளோம் என்றால் சரிதான். அந்த பகுதிகள் அருகருகே உள்ளன. நான் பொய்யான தகவலை கூறியுள்ளேன் என்றால் சரிதான். என் தாயாரின் வயது விபத்து சமயம் 73 என்றால் சரிதான். என் தாயார் பூ வியாபாரம் செய்து வந்ததற்கும் மாதம் ரூ.21,000/- வருமானம் பெற்றார் என்பதற்கும் ஆவணங்கள் எதனையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து தொடர்பாக போலிசார் தான் எனக்கு தகவல் அளித்தனர். ஆனால் எனது மனுவிலும் முதல் விசாரணை

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTR080003832023/truecopy/order-2.pdf
www.ecourtsindia.com

வாக்குமூலத்திலும் அருகில் இருந்தவர்கள் சொல்லி தெரியும் என்று தவறாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. விபத்து பற்றி தெரிந்தவுடன் நான் மருத்துவமனைக்க சென்றுவிட்டேன். அப்போது என் தாயார் மயங்கிய நிலையில் தான் இருந்தார். நான் தான் மருத்துவமனையில் வைத்து புகார் கொடுத்தேன். விபத்து நடந்த இடத்தை சென்று நான் பார்க்கவில்லை. இந்த விபத்தானது என் தாயாரின் கவனக்குறைவால் ரோட்டை கடக்கும் போது ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த பேருந்து நிலையம் எப்போதும் கூட்ட நெரிசலாக இருக்கும் என்றால் சரிதான். அங்கு இருக்கும் பேருந்துகள் மெதுவாகத்தான் செல்லமுடியும் என்றால் சரிதான். என் தாயார் தான் கவனக்குறைவாக தனக்கு பின்னால் வந்த பேருந்தை கவனிக்காமல் அதில் வழுந்துவிட்டார் என்றால் சரியல்ல. அதனால் எதிர்மனுதாரர் எந்த இழப்பீடும் கொடுக்கவேண்டியதில்லை என்றால் சரியல்ல. நாங்கள் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. நாங்கள் என் தாயாரை சார்ந்து இல்லை என்றும், தனித்தனியாக வசித்து வருகிறோம் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

www.ecourtsindia.com

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTR080003832023/truecopy/order-2.pdf